# பள்ளிக் கல்வித்துறை ,ஈரோடு மாவட்டம்

## 12 ம் வகுப்பு வரலாறு – வினா விடை (2014-15)

## இந்திய வரலாறு (6 மதிப்பெண்)

## 1.ஒழுங்கு முறைச்சட்டம் (கி.பி.1773)

- 1773- ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட ஒழுங்குமுறைச்சட்டம் வணிகக்குழுவின் அரசியலமைப்பு வரலற்றில் ஒரு புது
அத்தியாயம்.
- இயக்குநர் குழு உறுப்பினர்கள் பதவிக்காலம் ஓராண்டிலிருந்து 4 ஆண்டாக உயர்த்தப்பட்டது.
- வங்காள ஆளுநர் வில்லியம் கோட்டையின் தலைமைஆளுநர்.அவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள்.
- தலைமை ஆளுநருக்கு உதவியாக 4 பேர் கொண்ட ஒரு அலோசனைக்குழு அமைக்கப்பட்டது. பெரும்பான்மை முடிவுபடி அரசு செயல்பட வேண்டும்.
- தலைமை ஆளுநருக்கு முடிவு செய்யும் வாக்குரிமை வழங்கப்பட்டது. தலைமை ஆளுநர் மற்றும் ஆலோசனைக் குழுவிற்கு போர் அமைதி
- உடன்பாடு போன்ற விவகாரங்களில் மற்ற மகானங்களை கட்டுபடுத்த அதிகாரம் வழங்கப்பட்டது.
- கல்கத்தாவில் ஒரு உச்ச நீதிமன்றம் - ஒரு தலைமை நீதிபதி,மூன்று துணை நீதிபதிகள் இருப்பர்.இந்நீதிமன்றம் தலைமை ஆளுநர் மற்றும் ஆலோசனை குழுவிற்கு அப்பாற்பட்டு தனித்து இயங்கும்.

## 2. மூன்றாம் - மைசூர் போருக்குக் காரணங்கள்:

- பல்வேறு உள்நாட்டு சீர்த்திருத்தங்களை மேற்கொண்டு திப்பு தனது
- வலிமையால் பெருக்கி கொண்டார்.
- இதனால் பிரிட்டிஷாரும்,ஹைதரபாத் நிசாம்,மராட்டியாரும் கவலை கொண்டனர்.
- பிரான்சு ,துருக்கி நாடுகளுக்கு தூதுவர்களை அனுப்பி திப்பு
- ஆங்கிலேயருக்கு எதிராக உதவி கோரினர்.
- பிரிட்டாஷரின் கூட்டாளியான திருவாங்கூர் அரசியிடம் நிலம் கைப்பற்றி
- திப்பு தமது எல்லையை விரிவுப்படுத்தினார்.
- திப்புக்கு எதிராக ஹைதரபாத் நிசாம் மற்றும் மராட்டியருடன் முக்கூட்டு உறவினை பிரிட்டாஷார் ஏற்படுத்தினார்.
- திப்பு பிரிட்டாஷாருடன் ஸ்ரீரங்கப்பட்டனம் என்ற இடத்தில் செய்துக் கொண்ட உடன்படிக்கையின் படி இப்போர் முடிவுக்கு வந்தது.

## 3.துணைப்படைத் திட்டத்தின் கூறுகள்:

- இந்தியாவில் ஒரு வலிமைமிக்க பிரிட்டிஷ் ஆட்சியை ஏற்படுத்த வேண்டியது காலத்தில் கட்டாயம் என வெல்லெஸ்லி பிரபு கருதினர்.ஆகவே இதற்கு முன்பு இருந்த தலையிடாக் கொள்கையை கைவிட்டுதுணைப்படைத்திட்டம்" என்ற திட்டத்தை வகுத்தார்.பிரிட்டிஷ் அரசு தலைமை அரசு எள்றும் இந்திய அரசு பாதுகாக்கப்பட்ட அரசு என்று அழைக்கப்பட்டது.
- துணைப்பாடத்திட்டத்தில் சேரும் இந்திய அரசர் தனது ஆட்சிப்பகுதியில் பிரிட்டிஷ் படையை வைத்து பராமரிக்க வேண்டும்.
- பிரிட்டிஷ் அதிகாரி தலைமை வகிப்பார்.
- அயல்நாட்டு ஆக்கிரமிப்பு மற்றும் உள் நாட்டு அமைதி பாதுகாப்பு பிரிட்டிஷாரின் கடமையாகும்.
- ஆங்கிலேயர் தவிர வேறு ஐரோப்பிய அரசுடன் உறவு வைக்கக்கூடாது.
- உள் விவகாரங்களில் பிரிட்டிஷ் அரசு தலையிடக்கூடாது.

## 4.வாரிசு இழப்புக்கொள்கைகளின் கருத்து மற்றும் நடைமுறை

- டல்ஹௌசி அமைதி வழியில் நாடுகளை இணைக்க வழி வகை செய்தார்.
- இந்துசட்டத்தின்படி ஆண்வாரிசு இல்லாதவர்கள் தத்தெடுக்க அனுமதியுண்டு.
- டல்ஹௌசி வாதம்: வாரிசு இல்லாத அரசு பிரிட்டிஷ் அரசுடன் இணைக்கப்படும்.
- இணைக்கப்பட்டுள்ள நாடுகள்: ஜான்சி-சதாரா-
- 1857- கலகத்துக்கு இதுவே காரணமாகும்.

விளைவுகள் :

a) நாடியிணைக்கும் கொள்கையின் ஒரு கருவியாக செயல்பட்டது.

b) பிரிட்டிஷ் அரசு விரிவுப்படுத்தப்பட்டது.

## 5.இந்திய கைத்தொழில்கள் அழிவுக்கான காரணங்கள்

- ❑ ஆங்கிலேயர் கிழக்கு தேசிய வணிகக்குழு பின்பற்றிய கொள்கை இந்திய கைத்தொழிலுக்கு கேடு விளைவிப்பதாக இருந்தது.
- ❑ தொழிற்புரட்சியின் விளைவாக இங்கிலாந்து உற்பத்தி செய்யப்பட்ட விலை மலிந்த பொருட்கள் இந்திய சந்தைக்கு குவிக்கப்பட்டன.
- ❑ இந்தியாவில் பிரிட்டிஷாரின் அரசியல் செல்வாக்கு அதிகரித்த பிறகு இந்திய ஆட்சியாளர்கள் வீழ்ச்சியடைய தொடங்கினார்கள்.
- ❑ பரம்பரை அரச வம்சங்கள், பிரபுகள், செல்வந்தர்கள் இருந்த இடம் தெரியாமல் மறந்தன. அவர்கள் பயன்படுத்தியதை பரம்பரை ஆடம்பர பொருட்கள் தேவையும் பெருமளவு குறைந்தன.
- ❑ தொழிற்புரட்சியின்போது ஐரோப்பாவில் புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தியாவிலும் இயந்திரங்கள் சிறிது சிறிதாக கொண்டு வரப்பட்டதால் கைத்தொழில் நசிங்கியது.
- ❑ புதிய தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிக்கும் பொது மக்கள் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுத்தின.

## 6.உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவம்:

- ரிப்பன் நகரங்களில் நகர குழுக்கள்,தாலூக்காக்கள், கிராமங்களில் உள்ளாட்சி கழகங்கள் போன்றவற்றை வளர்த்தார்.
- நகர சபைகளின் அதிகாரங்கள் அதிகரித்தன.
- தலைவர்கள் அதிகாரிகளாக இல்லாமல் இருத்தல்
- சுகாதாரம், கழிவுநீர், சுத்திகரிப்பு, குடிநீர் வழங்குதல் நகர சபையிடம் வழங்கப்பட்டது.
- மாவட்ட தாலுக்கா கழகங்கள் உருவாக்கப்படல்
- தேர்தல் மூலம் உள்ளாட்சி கழக உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.
- ஸ்தல சுய ஆட்சி ரிப்பன் பிரபுவின் தலையாய சிறப்பாகும்.
- ரிப்பன் எங்கள் அப்பன் என மக்கள் போற்றினர்.

## 7.இராமலிங்க சுவாமிகள்:

- 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த, சமூக, சமயத்தலைவர்
- சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மருதூரில் ராமய்யா பிள்ளைக்கும் சின்னம்மாவிற்கும் மகனாகப்பிறந்தார்.
- 1865 இந்த சமரசத் சுத்த சன்மார்க்க அமைப்பை தோற்றுவித்தார். சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதே இதன் நோக்கம்.
- 1879-ல் வடலூரில் சத்ய ஞானசபையை நிறுவினர்.
- திருவருட்பா,மனுமுறை கண்ட வாசகம், ஜூவ காரூண்யம் போன்ற நூல்களை எழுதியவர்.
- கடவுளை ஜோதி வடிவில் வழிபடக் கோரினார்.

## 8.ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கியத்துவம்:

- பட்டயங்களையும், சிறப்பு பதவிகளையும் துறத்தல்.
- அரசு விழாக்களை புறக்கணித்தல்.
- நீதிமன்றங்கள்,அரசு பள்ளிகள்,கல்லூரிகள், ஆகியவற்றை புறக்கணித்தல்.
- அயல்நாட்டு பொருட்களை புறக்கணித்தல்.
- தேசிய பள்ளிகள், கல்லூரிகள் தனியார் பஞ்சாயத்துகள், நீதிமன்றங்கள் போன்றவற்றை புறகணித்தல்.
- சுதேசி பொருட்களையும், கதர்ஆடைகளையும் மக்களிடையே பிரபலப்படுத்துதல்.

## 9. ஜாலியன் வாலாபாக் படுகொலை:

- ரௌலட் சத்தியாகிரக போராட்டத்திற்கு பஞ்சாபில் பெருத்த ஆதரவு.
- ஆட்சி பொறுப்பு ஜெனரல் டயரிடம் ஒப்படைக்கப்பட்டது.
- 1919 ஏப்ரல் 13 ஜாலியன் வாலாபாக் படுகொலை நடைபெற்றது.
- விடுதலை இயக்கத்திற்கு இது திருப்புமுனை.
- ரௌலட் சட்டத்தை எதிர்த்து ஜாலியன் வாலாபாக் பூங்காவில் பொதுக்கூட்டம்.
- ஜெனரல் டயர் படையுடன் முன்னறிவிப்பின்றி கூட்டத்தின் மீது துப்பாக்கி சூடு.
- 379 பேர் கொல்லப்படுதல் - 1137 படுகாயம்.
- தாகூர் தமது நைட் பட்டத்தை துறந்தார்.

## 10. நீதிக்கட்சியன் கல்விச்சீர்திருத்தங்கள்: (ஏதேனும் 6)

- கட்டணமில்லாத கட்டாயக்கல்வி சென்னையில் அறிமுகம் படுத்தப்பட்டது.
- 3000 மீனவ குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் சிறுமியருக்கு இலவச மீன்பிடிப்பு பயிற்சி அளிக்கப்பட்டது.
- சென்னையில் குறிப்பிட்ட மாநகராட்சியில் பள்ளிகளில் இலவச மத்திய உணவு அளிக்கப்பட்டது.
- துவக்க கல்வியின் தரம் உயர்த்தப்பட்டது.
- பெண் கல்வி ஊக்குவிக்கப்பட்டது.
- ஆயுர்வேதா, சித்தா, யுனானி மருத்துவக்கல்விக்கு ஊக்கம் அளிக்கப்பட்டது.
- இட ஒதுக்கீடு அரசாணை 1921 -22 ல் கொண்டு வரப்பட்டது.
- 1929 பணியாளர் தேர்வு ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
- கிராம புறசாலைகள் மேம்படுத்தப்பட்டன.
- தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது.

## 11.புவியியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்கள்:

- கான்ஸ்டான்டி நோபிள் 1453 துருக்கியர் கைப்பற்றினர்.
- துணிச்சல், ஆர்வம், போட்டி மனப்பான்மை.
- வான இயல் மற்றும் அறிவியல் துறையின் முன்னேற்றம்.
- வணிகர்களின் கையேடு, ஆய்வாளரின் ரகசியங்கள் போன்ற நூல்கள்.
- கீழை நாடுகளுக்கு மாற்று வழி கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம்.
- மார்க் கோபோலோ பயணக்குறிப்பு கீழை நாடுகளின் செல்வ வளத்தை காட்டின.

## 12.இங்கிலாந்தில் ஏற்பட்ட தொழிற்புரட்சிக்கானகாரணங்கள்:

- இங்கிலாந்தின் சாதகமான புவியியல் அமைப்பு .
- வேளாண்மை புரட்சியின் தாக்கம்.
- புதிய கண்டுபிடிப்புகளும், இயந்திரங்களின் அறிமுகம்.
- தொழில் முனைவோர்களிடமும் காணப்பட்ட ஆர்வம்.
- இங்கிலாந்தில் ஏற்பட்ட முதலீட்டு வளர்ச்சி.
- இங்கிலாந்திடம் இருந்த குடியேற்றங்கள் கச்சாப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், உற்பத்தி பொருட்களுக்கு சந்தையாகவும் இருந்தன.

## 13.ரஷ்யப் புரட்சியில் லெனினின் பங்கு:

- போல்ஷ்விக்குகளின் தலைவராக விளாடிமிர் இலயிச் உலயநோவ் விளங்கினார். லெனின் என்பது இவரது புகழ் வாய்ந்த பெயராகும்.
- சோஷலிச இயக்கத் தலைவர்களில் பிரபலமாக விளங்கியவர்.
- இவர் ஏப்ரலில் ரஷ்யா திரும்பினார். இது ஏப்ரல் வாக்குறுதி எனப்படும்.
- போல்ஸ்விக்கள் போரை முடிவுக்கு கொண்டு வர தெளிவான கொள்கையை வகுத்தனர்.
- குடியானவர்கள் எல்லா உரிமைகளையும் சோவியத்துக்கே எனமுழக்கம்.
- லெனின் மற்றும் அவரது கட்சியினர் அக்டோபர் புரட்சியை வழி நடத்தினர்.

## 14.இரண்டாம் உலகப்போரின் விளைவுகள்:

- 1939-ம் ஆண்டு தொடங்கிய இரண்டாம் உலகப்போர் 1945-ல் ஜப்பான் சரணடைந்தவுடன் முடிவுக்கு வந்தது.
- இப்போது 13 மில்லியன் ஐரோப்பியர்கள் கொல்லப்பட்டன.
- இப்போது மற்றொரு முக்கிய விளைவு குடியேற்றங்கள் விடுதலையாகும்.
- பல துருவம் என்ற கோட்பாடு மறைந்து இரு அணிகளாக உலக நாடுகள் பிரிந்தன.
- அமெரிக்காவும், சோவியத் யூனியங்களும் வல்லரசு நாடுகள் ஆயின.
- இதனால் கெடுப்பிடிப்போர் என்ற பனிப்போர் (அல்லது) கோட்பாடு உருவாகியது.
- உலகமே பல்வேறு நேரடி அல்லது மறைமுக துன்பங்களுக்கு உள்ளானது.